## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

*பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன்.* *நாள்:* 18.*01.2008*

---

*பொருள் : எங்களுடைய இறைவா, அவர்களுக்கு உனது அடையாளங்களை எடுத்தோதி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கோனுமாவாய். (2:130)*

நான் தற்போது ஓதிய வசனத்தின் கருத்தே சென்ற குத்பாவிலிருந்து இன்றும் தொடர்கிறது. வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்ற ஒரு மகத்தான தூதரை தோன்றச் செய்யுமாறு ஹஸ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்கள் இறைவனிடம் துஆ செய்தார்கள். இறைவா! உனது போதனைகளை உலகம் முழுவதும் பரவச் செய்யும் அத்தூதர் நீ இறக்கிய வேதத்தின் ஹிக்மத்தையும் அதாவது ஞானத்தையும் மக்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்று அவர்கள் துஆ செய்தார்கள். ஹிக்மத் என்பதற்கு பல பொருள்கள் இருக்கின்றது.

**ஹிக்மத்** என்பதன் ஒரு பொருள் நீதியை நிலைநாட்டுவது என்பதாகும். **ஹிக்மத்** என்பதன் ஒரு பொருள் அறிவாகும். **ஹிக்மத்** என்பதன் ஒரு பொருள் ஒரு பொருளை சரியான இடத்தில் பயன்படுத்துவது அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப ஒரு பணியை செய்வது என்பதாகும். இந்த சொல்லை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரிகளிலிருந்தும் கியாமத் நாள் வரை நீடித்திருக்கும் திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்தும் நான் விளக்க இருக்கின்றேன்.

**ஹிக்மத்** என்பதன் ஒரு பொருள் நீதியை நிலைநாட்டுவது என்று நான் கூறினேன். இந்த பொருளின் அடிப்படையில் வரவேண்டிய அந்த தூதர் நீதியை நிலைநாட்டுபவராக இருக்க வேண்டும் என்றும் நீதியை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பவராக இருக்க வேண்டும் என்றும் ஹஸ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள்.

அந்த தூதர் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார் (2:130) என்று இறைவன் கூறியதிலிருந்தும் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த மகத்தான தூதர் தோன்றிவிட்டார். ஞானங்களால் நிறைந்துள்ள வேதம் அவர் மீது இறங்கி விட்டது. இந்த தூதர் உங்களுக்கு இந்த வேதத்தின் ஞானத்தை இன்னும் கற்று கொடுக்கின்றார். கியாமத் நாள் வரை கற்றுக் கொடுத்துக் கொண்டே செல்வார். அதாவது இந்த போதனைகள் மக்களுக்கு நீதியுடன் நடந்து கொள்வதை கற்று கொடுக்கின்றது. கியாமத் நாள் வரை இந்த வேதநூல்தான் தனது போதனைகள் மூலம் உலகில் நீதியை நிலைநாட்ட முடியும். இந்த மகத்தான தூதரின் சொல்லும், செயலும் ஒரு போதும் நீதியுடன் நடந்து கொள்வதை விட்டும் விலகியிருக்கவில்லை. மாறாக இந்த மகத்தான நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியும் உயர்வான முன்னுதாரனங்களை நிலைநாட்டிவிட்டது. அந்த உயர்வான தகுதியை வேறு எவரும் பெறமுடியாது. ஒவ்வொருவரும் தங்களுக்கிருக்கின்ற சக்திக்கு ஏற்ப இந்த அழகிய முன்மாதிரியை பின்பற்றி நடக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்கையிலிருந்து ஒரு சில சம்பவங்களை உங்கள் முன்வைக்கிறேன்.

ஹுனைன் போருக்கு பிறகு போரில் கிடைத்த பொருள்கள் மக்களுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டபோது அரபு கோத்திரத்திலுள்ள சில தலைவர்களுக்கு மற்றவர்களைவிட முன்னுரிமை வழங்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றவர்களைவிட அதிகமாக அவர்களுக்கு பொருள்களை வழங்கினார்கள். இதை பார்த்த சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை என்று ஆட்சேபனை செய்தார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் நீதியுடன் நடந்து கொள்ளவில்லையென்றால் வேறு எவர்தான் நீதியுடன் நடக்க போகின்றார்? என்று கேட்டார்கள். அதிகப்படியாக சிலருக்கு பொருள்கள் வழங்கப்பட்டதற்கான காரணம் மக்களது உள்ளங்களை அன்பால் ஈர்க்க வேண்டும். அதன் மூலம் இந்த அரபு கோத்திரத்தின் தலைவர்கள் இஸ்லாத்திற்கு அருகில் வந்து இஸ்லாத்தில் இணைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருந்திருக்கின்றது. அவ்வாறு அந்த அரபு கோத்திரத்து தலைவர்களும் அந்த கோத்திரத்தை சார்ந்த

மக்களுடன் இஸ்லாத்தில் இணைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவர் மீதும் அநீதி இழைத்தவாறு அதிகப்படியாக இந்த பொருள்களை சிலருக்கு வழங்கவில்லை.

மாறாக, அல்லாஹுஜத்தஆலா போரில் கிடைத்த பொருள்களில் அதன் ஐந்தாவது பங்கினை அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் செலவிடலாம் என்று கூறியிருந்ததால் அந்த செல்வத்திலிருந்தும் பலதரப்பட்ட மக்களுக்கு அதனை வழங்குவதற்கான உரிமையை அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழங்கியிருந்தான். சிலருக்கு நான் அதிகப்படியான செல்வங்களை வழங்குவதற்கு காரணம் அவர்களின் ஈமானிலுள்ள பலவீனங்களை நான் கருத்தில் கொள்கிறேன்; அவர்களது பேராசையை கருத்தில் கொண்டு நான் அவ்வாறு செய்கின்றேன். எவர்களது ஈமான் வலுவாக இருக்கின்றது என்று நான் கருதுகின்றேனோ அவர்களுக்கு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப நான் குறைவாக வழங்குகின்றேன். ஆனால், வலுவான ஈமானுள்ள இவர்களைத்தான் நான் அதிகமாக நேசிக்கின்றேன் என்று ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, இறைவனின் கட்டளைக்கேற்பவே அதிகப்படியான செல்வங்களை அவர்கள் சிலருக்கு வழங்கினார்கள். இவ்வாறு நுட்பமான ஞானத்துடன் செயல்பட்டு சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சரியான நீதியை அவர்கள் கடைபிடித்ததன் விளைவாக மக்களது ஈமான் மேலும் சிறப்பாக அமைய அவர்கள் வழிவகுத்தார்கள்.

சூரா அந்நஸர் இறங்கிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் உரை நிகழ்த்தினார்கள். சூரா அந்நஸர் இறங்கிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகப் போகின்றார்கள் என்பதை சஹாபாக்கள் புரிந்து கொண்டார்கள். அந்த உரையை கேட்ட சஹாபாக்கள் அழுதார்கள். இந்த உரையை நிறைவு செய்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்கள் அனைவரிடமும் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். எவராவது என்னிடமிருந்து தனக்குள்ள உரிமையை பெற வேண்டுமென்றால் அல்லது நான் செய்த தவறுக்காக என்னை பழிவாங்க வேண்டுமென்றால் மறுமைநாளுக்கு முன்பாக இவ்வுலகிலேயே அவற்றை என்னிடமிருந்து பெற்று கொள்ளலாம் என்று கூறினார்கள். இதனை கேட்ட வயதில் மூத்த சஹாபியான ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களை பார்த்து எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நீங்கள் மீண்டும் மீண்டும் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எவர் நான் செய்த தவறுக்காக என்னை பழிவாங்க வேண்டும் என்று நினைக்கின்றாரோ அவர் பழிவாங்கலாம் என்று கூறியுள்ளீர்கள். நான் ஒன்றை கூற விரும்புகின்றேன். ஒரு போரில் எனது ஒட்டகம் உங்களது ஒட்டகத்திற்கு அருகில் வந்தது. அப்போது நான் ஏதோ ஒரு காரணத்திற்காக எனது ஒட்டகத்திலிருந்து இறங்க வேண்டியது வந்தது. நான் இறங்கிக் கொண்டிருக்கும் போதே நீங்கள் கையில் வைத்திருந்த பிரம்பின் அடி என் மீது விழுந்தது. என்னை அடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நீங்கள் அவ்வாறு செய்தீர்களா அல்லது ஒட்டகத்தை அடிப்பதற்காக அவ்வாறு செய்தீர்களா என்று எனக்கு தெரியாது. ஆனால், உங்களது கையிலிருந்த பிரம்பின் அடி என் மீது விழுந்தது என்று ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மகிமை மிக்க தோற்றத்தின் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். அல்லாஹ்வின் தூதர் தெரிந்து கொண்டே உம்மை ஒருபோதும் அடித்திருக்க முடியாது என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிரம்பை எடுத்து வருமாறு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பிரம்பை எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்களிடம் அந்த பிரம்பைக் கொடுத்தார்கள். இதை வைத்து என்னை பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

இதைக் கேட்டதும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் எழுந்து நின்றார்கள். இவர்கள் அனைவரும் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். அதற்கு பதிலாக எங்களைப் பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத்தான் பழிவாங்க வேண்டும் என்று ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களும் எழுந்து நின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரர்களாக இருக்கின்றோம். எனவே, எங்களை பழிவாங்கிக் கொள்ளுங்கள் என்று அவர்கள் இருவரும் கூறினார்கள். அதனை கேட்ட ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள், இல்லை; நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத்தான் பழிவாங்குவேன் என்று

கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறு கூறிய அனைவரையும் அமர வைத்துக் கொண்டிருந்தார்கள்.

நீங்கள் அனைவரும் அமருங்கள். அவர் என்னைதான் பழிவாங்குவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது பிரம்பின் அடி என் மீது விழுந்த போது எனது உடலில் ஆடை இருக்கவில்லை என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களது உடலிலிருந்து ஆடையை கழற்றினார்கள். பிறகு என்னை அடியுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எல்லா சஹாபாக்களும் இந்த காட்சியை கண்டு செய்வதறியாது அழ ஆரம்பித்தார்கள். ஆனால், மறுநிமிடமே அவர்கள் கண்ட காட்சி இரண்டு அன்பர்களுக்கிடையில் நிகழ்ந்த அளவற்ற அன்பின் காட்சியாக இருந்தது.

ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உடலை முத்தமிட ஆரம்பித்தார்கள். எனது தாயும், தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும். உங்களை பழிவாங்குவதை எவரால் சகித்துக் கொள்ள முடியும்? நீதியின் புதிய புதிய வழிமுறைகளை நீங்கள்தான் எங்களுக்கு கற்றுத் தந்தீர்கள். நீங்கள் அநீதி இழைப்பீர்கள் என்பதை எங்களால் சிந்தித்துப் பார்க்கவே முடியாது. உங்களிடமுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு எனக்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்து விட்டது. அதை நான் வீணாக்க விரும்பவில்லை என்று ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். ஆனால், நீதியின் அரசரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகான பதிலை கூறியுள்ளார்கள் என்று பாருங்கள். ஒன்று நீங்கள் என்னை பழிவாங்க வேண்டும்; அல்லது என்னை மன்னிக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபித்தோழரிடம் கூறினார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் மறுமைநாளன்று என்னை மன்னித்து விடுவான் என்ற நம்பிக்கையில் நான் உங்களை மன்னிக்கின்றேன் என்று ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

சபையில் அமர்ந்திருந்த எல்லோரையும் நோக்கியவாறு எவர் சுவர்க்கத்தில் எனது நண்பராக இருக்கின்ற ஒருவரை பார்க்க விரும்புகின்றாரோ அவர் இந்த கிழவரான அக்காஷாவை பார்த்துக் கொள்ளட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் மீது கோபம் கொண்டவாறு அமர்ந்திருந்த அந்த நபித்தோழர்கள் ஒவ்வொருவரும் எழுந்து வந்து ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்களை முத்தமிட ஆரம்பித்தார்கள். அவருக்கு கிடைத்த நற்பாக்கியத்தை கண்டு பெருமிதம் கொண்டார்கள். இதுதான் அந்த மகத்தான தூதர் நிலைநாட்டிய நீதியாகும். அதனையே அவர்கள் தங்களது நபித்தோழர்களிடத்திலும் நிலைநாட்டிக் காண்பித்து அவர்களையும் நீதியின்படி செயல்பட வைத்தார்கள்.

திருக்குர்ஆனில் நீதியை நிலைநாட்டுவது பற்றி மிகவும் வலியுறுத்தி கூறப்பட்டிருக்கின்றது. அது தொடர்பான சில வசனங்களை நான் கூறவுள்ளேன். அல்லாஹ் கூறுகின்றான்.

நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நீதியுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதை போல)க் கொடுக்கவும் கட்டளை இடுகின்றான். (எல்லா வகை) வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றில் இருந்தும், வரம்புமீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான் (16:91)

சமுதாயங்களிலும் முழு உலகிலுமுள்ள பிரச்சனைகளுக்கான தீர்வு இந்த ஞானம் நிறைந்த கட்டளையின்படி செயல்படுவதன் மூலமே கிடைக்கும். நுட்பமான ஞானத்துடன் கடைபிடிக்கப்படும் நீதியின் மூலமாகத்தான் நன்மையின் தரம் உயரமுடியும். அந்த நீதியின் மூலமாக அன்பும் நேசமும் ஏற்படும். அதன் மூலமாக எல்லாவிதமான தீமைகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ள சமுதாயம் முயற்சி செய்யும். தண்டனை வழங்குவதால் மட்டும் நீதியை நிலைநாட்ட முடியாது. மாறாக சில சந்தர்ப்பங்களில் பிறருக்கு நன்மை செய்வதன் மூலமாக, மேலும் அன்பு நேசம் ஆகியவற்றின் உணர்வுகள் வளர்ச்சியடைவதன் மூலமாக நாம் நீதியை நிலைநாட்ட வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தால் தீமைகளிலிருந்து தன்னை விலக்கி கொண்டு நன்மைகளில் தொடர்ந்து நிலைநிற்பதன் மூலமே நீதியை நிலைநாட்ட முடியும். நீதியின் மூலம் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். எனவே, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப நீதி கடைபிடிக்கப்பட வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நன்மைக்கு எதிரில் குறைந்தபட்சம் அதே அளவு நன்மை செய்ய வேண்டும். அதையும் கடந்து எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு நன்மை செய்ய முடிந்தால் அவ்வாறு நன்மை செய்யுங்கள். அதையும் கடந்து நெருங்கிய உறவினர்களிடம் பறிமாறுவது போன்று இயல்பாகவே உங்களிடம் இருக்கும் நல்லுணர்வின் காரணமாக பிறருக்கு நன்மை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அனுதாபத்துடன் நடந்து கொள்வதுடன் நன்மை செய்யுங்கள். வரம்பு மீறி செயல்படுவதை அல்லாஹ் தடை செய்துள்ளான். அறிவு மறுக்கும் வகையிலுள்ள நன்மைகளை செய்யாதீர்கள். அதாவது, இதன் கருத்து பிறருக்கு நன்மை செய்யக் கூடாத சந்தர்ப்பத்தில் நன்மை செய்வதும் நன்மை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தில் நன்மை செய்யாமலிருப்பதும் தவறாகும். அல்லது பிறரிடம் நெருங்கிய உறவினர் போல் பரிமாறுவதில் சில சந்தர்ப்பங்களில் குறைவாக செயல்பட்டாலும் அதுவும் சரியன்று. அவ்வாறே சந்தர்ப்ப சூழ்நிலைக்கு மாற்றமாக ஒருவர் மீது அதிகமாக கருணையுடன் நடந்து கொள்வதும் சரியல்ல.

இந்த வசனத்தில் அல்லாஹ் நன்மையை பெறுவதற்கான மூன்று படித்தரங்களை விளக்கிக் கூறியுள்ளான். முதலாவது படித்தரம், ஒருவர் செய்த நன்மைக்கு எதிரில் அதே அளவு நன்மையை செய்வதாகும். சாதாரண நிலையிலுள்ள மனிதனும் கூட நல்லொழுக்கத்தின் மிக கீழ் நிலையிலுள்ள இந்த படித்தரத்தை பெற முடியும். இரண்டாவது, படித்தரம் இதைவிட கடினமானதாகும். எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் ஒருவருக்கு நன்மை செய்வதுதான் நடுநிலையிலுள்ள நல்லொழுக்கத்தின் இரண்டாவது படித்தரமாகும். பலரும் ஏழைகளுக்கு நன்மை செய்கின்றார்கள். அவ்வாறு நன்மை செய்பவர்கள் நான் இவர் மீது நன்மை செய்துள்ளேன் என்று கருதுவதுதான் மிகப்பெரிய குறையாக இருக்கின்றது. குறைந்தபட்சம் எவர் மீது அவர் நன்மை செய்தாரோ அவரிடமிருந்து நன்றிக்கான துஆவை அவர் எதிர்பார்க்கின்றார். ஆனால், இவரிடமிருந்து நன்மைகளை பெற்று கொண்ட எவராவது இவருக்கு எதிராக செயல்பட்டால் அவருக்கு நன்றி மறந்தவர் என்ற பெயரை இவர் வைக்கின்றார். சில நேரங்களில் எவர் மீது நன்மைகள் செய்யப்படுகின்றதோ அவர் மீது நன்மைகள் செய்கின்றவர் அவரது சக்திக்கு அப்பாற்பட்ட சுமைகளை போடுகின்றனர். அல்லது தான் செய்த நன்மையை அவருக்கு சுட்டிக்காட்டுகின்றனர்.

**இவ்வாறு நன்மை செய்பவர் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

***நம்பிக்கை கொண்டவர்களே! நன்மைகளை செய்பவர்களே! உண்மையான நல்லுள்ளத்துடன் நீங்கள் செய்கின்ற சதக்காக்களை (தருமங்களை) நீங்கள் செய்த உபகாரத்தை நினைவூட்டியும், பிறருக்கு துன்பங்கள் கொடுத்தும் வீணாக்கி விடாதீர்கள். (2:265)***

***சதகா*** என்ற சொல் ***சித்க்*** (உண்மை) என்ற மூலச் சொல்லிலிருந்து வந்ததாகும். உள்ளத்தில் உண்மையும் மனத்தூய்மையும் இல்லாமல் செய்யப்படும் தருமங்கள் தருமங்களாக இருக்காது. அது வெளிவேஷமாகவும் பிறருக்கு காட்டுவதற்காக செய்யும் செயலாகவும் ஆகிவிடும். எனவே, பிறருக்கு நன்மை செய்பவர்கள் தனக்கு கோபம் வரும் சமயத்தில் பிறருக்கு தான் செய்த நன்மைகளை நினைவூட்டுகின்றார்கள். இதன் காரணமாகவே அல்லாஹ் நன்மை செய்பவர்களை எச்சரிக்கின்றான்.

நன்மையை பெற்றுக்கொள்வதிலுள்ள மூன்றாவது படித்தரம் தான் செய்ததை நன்மை நன்மை என்று ஒருவர் கருதாமல் இயல்பாகவே ஒரு தாய் தன் மகனுக்கு நன்மை செய்வதுபோல் அவர் எவ்வித நன்றிகூறுதலையும் எதிர்பார்க்காமல் மிகுந்த அனுதாபத்துடன் பிறருடன் நடந்து கொள்ள வேண்டும். நன்மையை பெறுவதற்கான இறுதி படித்தரமாக இது இருக்கின்றது. இதையும் கடந்த செல்வது சாத்தியமற்றமானதாகும். ஆனால், நன்மையை பெற்றுக் கொள்வதற்கான இந்த அனைத்து படித்தரங்களையும் அல்லாஹ் அதற்கேற்ற சரியான இடத்துடனும் சந்தர்ப்பத்துடனும் தொடர்புள்ளவையாக ஆக்கிவிட்டான். மேலும் இந்த வசனத்தில் அல்லாஹ் இந்த நன்மைகளை ஒருவர் அதற்கேற்ற இடத்திலும் சந்தர்ப்பத்திலும் செய்யாவிட்டால் அவை தீமைகளாகிவிடும். மேலும் அது நீதியாகாது. மாறாக அநீதியாகிவிடும். நன்மைக்கு பகரமாக அவை வெறுக்கத் தக்கவையாக மாறிவிடும். உறவினர்களுக்கு கொடுப்பதைப்போல் கொடுக்கும் நன்மைக்கு பகரமாக அவை வரம்புமீறி செயல்படுவதாக ஆகிவிடும் அளவுக்கு அதிகமாக பெய்து வயல்களுக்கு நாசம் விளைவிக்கும் மழைக்குத்தான் அரபியில் **பகீ** என்ற சொல் கூறப்படும். கொடுக்க வேண்டிய உரிமையுள்ளவற்றை குறைத்து கொடுப்பதற்கும் அல்லது ஒருவருக்குள்ள உரிமையைவிட அதிகமாக கொடுப்பதற்கும் **பகீ** என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இந்த

நன்மை பெறுவதற்கான மூன்று படித்தரங்களையும் அவற்றிற்கேற்ற இடத்திலும் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தி நன்மை செய்யாவிட்டால் அதுவே தீமையாகி விடுகின்றன. எனவேதான் அல்லாஹ் இப்படிப்பட்ட மூன்று வகை நன்மைகளையும் அதற்கேற்ற இடத்திலும் சந்தர்ப்பங்களிலும்தான் செய்யவேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைத்துள்ளான்.

இந்த இடத்தில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். நன்மையின் இந்த எல்லா படித்தரங்கள் மட்டும் ஒருவரிடம் இருந்தாலும் அவை போதுமானதல்ல. ஏனென்றால், இவை யாவும் இயல்பிலேயே அவனிடமுள்ள ஆற்றல்களாகும். சிறுவர்களிடம் கூட அவர்களது அறிவு பக்குவமடைவதற்கு முன்பாக இது போன்ற நன்மை செய்யும் ஆற்றல்கள் இருக்கின்றது. ஆனால், அறிவுடன் செயல்படுவது நல்லொழுக்கத்திற்கு நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் இயல்பாக உள்ள ஆற்றல்களை அதற்கேற்ற இடத்திலும் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப் படுவதும் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஞானம் நிறைந்த திருக்குர்ஆனின் போதனைகள்தான் நீதியை நிலைநாட்டுவதற்குரிய பல வழிகளை நமக்கு காட்டுகின்றது.

திருடுவதையே பழக்கமாக்கிக் கொண்ட ஒரு திருடனுடன் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. ஆனால், அதற்கு பதிலாக நாம் அவனை மன்னித்து விட்டுவிட்டால் இது நீதியாகாது. ஆனால் பசியால் வாடும் ஒருவர் தன் பசியை போக்கிக் கொள்வதற்காக உணவுப் பொருட்களை திருடினால் அவரை தண்டிப்பதற்கு பகரமாக அவரது உணவுக்குரிய ஏற்பாட்டை செய்யவேண்டியது அவசியமாகும். அதுவே நீதியாகும். அதன் மூலமாக அவரது வயிறும் அவரது மனைவி மக்களின் வயிறும் நிரம்பும். இப்படிப்பட்ட நன்மைகளை செய்தால் தான் நீதியை நிலைநாட்ட முடியும். ஆனால், இவ்வாறு உணவு பொருட்களை திருடுபவர் படிப்படியாக தினமும் திருடுவதையே வழக்கமாக்கிவிட்டால் பிறகு அப்படிப்பட்டவருக்கு தண்டனை வழங்குவதுதான் நீதியாகும். எனவே, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப செய்யப்படும் செயல்களே உண்மையில் நீதியாக இருக்கின்றது. இதனையே அரபியில் **அதல்** என்று நாம் கூறுகின்றோம்.

தவ்ஹீதை நிலைநாட்டுவதும், படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதும்தான் திருக்குர்ஆனின் போதனைகளின் சுருக்கமாக இருக்கின்றது. இதற்காக மனிதனுடைய எண்ணங்களில் நீதியுடன் நடந்து கொள்வதை பதியச் செய்யவேண்டியது அவசியமாகும். இதை மூளையில் பதிய வைப்பதற்காக ஓரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

***நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நன்றாக கண்காணித்து வருபவர்களாக இருந்து நீதிக்கு ஆதரவாக சாட்சி கூறுபவர்களாக நீங்கள் ஆகிவிடுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை ஒருபோதும் உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்டவேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான் (5:9)***

நாங்கள் நம்பிக்கையாளர்கள் என்ற வாதத்தில் நீங்கள் உண்மையாளர் களாக இருந்தால் நம்பிக்கையாளர்கள் எப்போதும் நீதிக்கு ஆதரவாகத்தான் நிற்பார்கள். இறைக் கட்டளைகளின் ஒளியில் நீதியை நிலைநாட்டுவதே அவரது பணியாகும். இப்படிப்பட்ட சிந்தனை இருந்தால்தான் அவர் மூஃமினாக இருக்க முடியும். ஏனென்றால், இந்த சிந்தனை இல்லாத ஈமான் குறையுள்ள ஈமானாகத்தான் இருக்கும். உள்ளத்தின் ஓசையே இறைதிருப்தி கிடைக்க வேண்டும் என்று இருந்தால் எவ்வகையிலுள்ள பகையும் ஒரு மூஃமினை அவர் நீதியுடன் நடக்காதவாறு செயல்பட வைக்காது. எனவே, தக்வாவில் முன்னேறியவாறு எப்போதும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது ஒரு மூஃமினின் கடமையாகும். அல்லாஹ்விடம் இருந்து எந்த ஒரு விஷயமும் மறைவானதாக இல்லை. இவ்வளவு மகத்தான போதனை கிடைத்த பிறகும் நீங்கள் தக்வாவுடன் செயல்படவில்லையென்றால் அந்த போதனைக்கு எற்ப செயல்படாதவர் உண்மையான மூஃமினாக இருக்க முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மை இல்லாமல் ஒருவர் நீதியுடன் நடந்த கொள்ள முடியாது. இதைப்பற்றி அல்லாஹ் உங்களை எதிர்க்கின்ற சமுதாயங்களின் பகைமை அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்வதைவிட்டும் உங்களை தடுக்க வேண்டாம் (5:9) என்று கூறுகின்றான். நீதியில் நிலைத்து நில்லுங்கள். இதில்தான் தக்வா இருக்கின்றது என்று

கூறுகின்றான். எந்த சமுதாயம் அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் பிறருக்கு தொல்லைகளையும், துன்பங்களையும் கொடுக்கின்றதோ, கொலைகள் செய்கின்றதோ, பிறரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி பெண்களையும், சிறுவர்களையும் கொலை செய்கின்றதோ அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்வதுதான் மிகப்பெரும் விஷயமாகும். இப்படித்தான் மக்காவிலுள்ள காஃபிர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மீது கொடுமைகளை இழைத்தார்கள். அதற்கு பிறகு கூட போர் செய்வதிலிருந்தும் அவர்கள் விலகவில்லை. அப்படிப்பட்டவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்வது எவ்வளவு கடினமான விஷயமாக இருக்கின்றது? ஆனால், அப்படிப்பட்ட உயிருக்கு எதிரியாக இருந்த பகைவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளைக் கூட திருக்குர்ஆன் வீணாக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுடன் நீதியுடனும் நேர்மையுடனும் நடந்து கொள்ளுமாறு அது வலியுறுத்திக் கூறுகின்றது. பகைவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது எளிதான விஷயம்தான். ஆனால், பகைவர்களின் உரிமையை பாதுகாப்பதும் வழக்குகளில் நீதியை கைவிடாமல் இருப்பதும் மிகவும் கடினமான விஷயமாகும். வீரம் மிக்க மனிதர்களால் மட்டுமே இவ்வாறு நடந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட வீரத்தையும் சகிப்புத் தன்மையையும்தான் இஸ்லாம் தன்னை பின்பற்றுபவர்களிடம் உருவாக்க விரும்புகிறது. அதாவது, உங்களது அழகிய பரிமாற்றமும் நீதியுடன செயல்பட்டு நன்மைகளை நீங்கள் செய்வதும்தான் எதிரிகளையும் கூட உங்கள் நண்பர்களாக ஆக்குகின்றது.

ஹிக்மத் என்பதன் இன்னொரு பொருள் அறிவை முழுமைப்படுத்து வதாகும். அதாவது, அந்த மகத்தான தூதர் தனக்கு இறக்கப்பட்ட போதனைகள் மூலம் அறிவை முழுமைப்படுத்துவார். அல்லாஹ் ***இன்றைய நாளில் நாம் மார்க்கத்தை முழுமைபடுத்தி எனது அருட்கொடைகளை உங்கள் மீது நிறைவு செய்துள்ளேன் (5:4)*** என்று கூறுகிறான். இந்த வசனம் தொடர்பான கருத்தை கடந்த குத்பாவில் நான் கூறிவிட்டேன். இந்த மகத்தான தூதர் மீது அல்லாஹ் தனது போதனைகளை நிறைவடைய செய்துவிட்டான். அப்போதனைகள் முழுமை அடைந்து விட்டன. இப்போது திருக்குர்ஆனிலுள்ள அறிவுகள் முழுமையடைந்து விட்டன என்பதை விளக்கியவாறு இந்த காலம் தொடர்பாக உள்ள திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் சிலவற்றை நான் கூறவுள்ளேன். இந்த மகத்தான தூதருக்கு இறைவன் அன்றே அறிவித்த முழுமை பெற்ற வேதமாகிய திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள சில முன்னறிவிப்புகள் பற்றி கடந்த காலத்திலுள்ள மக்கள் கூட அவை எப்படி நிறைவேறும் என்பதைப் பற்றி சிந்தித்துக்கூட பார்த்திருக்க முடியாது. 1400 வருடங்களுக்கு முன்னர் கூறப்பட்ட அந்த முன்னறிவிப்புகள் தொடர்பாக அந்த காலத்திலுள்ள மக்களால் என்ன புரிந்திருக்க முடியும்? உதாரணமாக, சூரா ரஹ்மானில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அவன் இரண்டு கடல்களை மிக நெருக்கமாகப் படைத்துள்ளான். அவை (ஒருநாள்) இணைந்துவிடும். அவ்விரண்டிற்கும் இடையில் தடுப்பு ஒன்று உள்ளது. இதனால், அவை அதன் வரம்பை மீறி செல்ல முடியாது. ஜின்கள், மனிதர்கள் ஆகிய நீங்கள் இருவரும் உங்கள் இறைவனின் அருள்களுள் எதனையெல்லாம் மறுப்பீர்கள். அந்த இரண்டு கடல்களிலிருந்தும் முத்துக்களும் பவளங்களும் வெளிப்படுகின்றன.

இந்த வசனத்தில் இரண்டு கடல்கள் இணைந்து விடும் என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. அதற்குரிய அடையாளமாக அவற்றிலிருந்து முத்துக்களும் பவளங்களும் வெளிப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. முதலாவதாக சூயஸ் கால்வாய் மூலமாக இரண்டு கடல்கள் இணைந்துள்ளன. அதாவது சூயஸ் கால்வாய் மூலம் மத்திய தரைக்கடலும் செங்கடலும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் பனாமா கால்வாய் மூலம் அட்லாண்டிக் பெருங்கடலும், பசிபிக் கடலும் இணைக்கப்பட்டுள்ளன. இதைப்பற்றி எவருமே அறியாத ஒரு காலத்தில் இதைப் பற்றிய செய்தியை அல்லாஹ் தனது தூதருக்கு அறிவித்தான். எங்கெங்கு கடல்கள் இருக்கும். அவை எப்படி இணைக்கப்படும் என்பதைப் பற்றி அக்காலத்திலுள்ள அரபு மக்கள் சிந்தித்துக் கூட பார்த்திருக்க முடியாது. 1300 வருடங்களுக்கு பிறகு இந்த முன்னறிவிப்பு நிறைவேறிய மகத்தான காட்சியை அல்லாஹ் நமக்குக் காட்டியிருக்கின்றான். இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறைவான செய்திகளை அறிந்துள்ள இறைவன் அறிவித்த அறிவுப்பூர்வமான விஷயங்களாகும். பிறகு இந்த பிரபஞ்சம் தொடர்பான அறிவையும் அல்லாஹ் அவர்களுக்கு தெரிவித்தான். இந்த பிரபஞ்சம் உருவானது எப்படி என்பதைப் பற்றியும் அல்லாஹ் அவர்களுக்கு தெரிவித்தான். அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

வானங்களும் பூமியுமாகிய இரண்டும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. பின்னர் நாம் அவற்றை

பிரித்து தனித்தனியாக ஆக்கிவிட்டோம். தண்ணீரிலிருந்து உயருள்ள ஒவ்வொரு பொருளையும் உருவாக்கினோம் என்பதனை நிராகரிப்பவர்கள் காணவில்லையா? (21:31)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்ற இந்த கருத்தை தற்போதைய ஆராய்ச்சியும் உண்மைப்படுத்தியிருக்கின்றது. அதாவது, இந்த உலகம் முழுமையாக படைக்கப்பட்ட சமயத்தில் அது ஒரு பந்து போன்ற வடிவத்தில் மூடப்பட்டிருந்தது. வானமும், பூமியும் பந்து போன்ற வடிவத்தில் இரண்டும் இறுக்கமாக மூடப்பட்டிருப்பதை நிராகரிப்பவர்கள் காணவில்லையா? அவற்றை நாம் தனியாக பிரித்து திறந்து விட்டோம் (21:31) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இந்த அறிவை 1400 வருடங்களாக அல்லாஹ் திருக்குர்ஆனில் பாதுகாத்து வைத்திருக்கின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில்தான் இதன் உண்மை வெளிப்பட்டது. விஞ்ஞானிகள் ணுதிப் ணுநிற்ப் பற்றிய கருத்தை வெளியிட்டார்கள். அதாவது ஒரு அதிபயங்கர வெடிப்பிற்குப் பின்னர் தான் இந்த பிரபஞ்சம் உருவானது என்று அவர்கள் கூறினார்கள். இது மிகவும் விரிவான விஷயமாகும். இதை நான் ஏன் கூறினேன் என்றால் திருக்குர்ஆன் 1400 வருடங்களுக்கு முன்னரே இதைப் பற்றி கூறி விட்டது. அதை இன்றைய விஞ்ஞானிகள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். இவ்வாறே தண்ணீரிலிருந்தே மனிதனின் வாழ்க்கை ஆரம்பமானது என்ற திருக்குர்ஆனின் முன்னறிவிப்பும் இப்போது விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பல முன்னறிவிப்புகள் நிறைவேறியிருப்பதை நாம் பார்க்க முடியும்.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

***வஸ்ஸமாயி பனைனாஹா பி அய்தின் வ இன்னா லமூஸிஊன்** - நான் வானத்தை நமது சிறப்பான வல்லமையினால் உருவாக்கினோம். நிச்சயமாக நாம் அதை விரிவுபடுத்த இருக்கின்றோம். **(51:48)***

நமது திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகளில் இந்த வசனத்திற்கு பல்வேறு பொருள்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் உள்ள அறிவுக்கேற்ப இந்த வசனத்திற்கு பொருள் கொடுக்கப்பட்டது. பிறகு விஞ்ஞானம் முன்னேறிய காலத்தில் இதன் பல பொருள்களும் நமக்கு தெரிய வந்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் இந்த வசனத்திற்கு நாம் வானத்தை நமது சிறப்பான வல்லமையின் மூலமாக உருவாக்கினோம் என்று மொழிபெயர்த்திருக்கின்றார்கள். மேலும் இந்த வசனத்தில் அல்லாஹ் நிச்சயமாக நாம் அதை விரிவுபடுத்த இருக்கின்றோம் (51:48) என்றும் கூறியுள்ளான். ஷருளஷீெ ுஶணுஃன என்ற விஞ்ஞானி தனது ஆராய்ச்சியின் மூலம் பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருப்பது பற்றி கூறியுள்ளார். இவரே இந்த கருத்தை முதலில் கூறினார். கடந்த சில மாதங்களுக்கு முன் ஒரு மாதப் பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியில் புதிதாக செய்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இவ்வாறு பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருப்பதிலுள்ள அந்த வேகம் முன்பை விட பல மடங்கு அதிகரித்துள்ளது. அதாவது விஞ்ஞானிகளின் அறிவில் அதன் வேகம் எந்த அளவு இருந்ததாக இதற்கு முன்னர் கருதப்பட்டதோ அதைவிட பல மடங்கு அதிகமான வேகத்துடன் பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருப்பது தெரிய வந்திருக்கின்றது. எவ்வாறிருப்பினும் பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருப்பதாக திருக்குர்ஆன் கூறிய முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பது மிகத் தெளிவாக தெரிய வருகின்றது.

நமது சிறப்பான வல்லமை மூலம் வானத்தை உருவாக்கினோம் என்ற இந்த வசனத்தின் இன்னொரு பொருள் நமது பல்வேறு பண்புகள் மூலம் இதை உருவாக்கினோம் என்பதாகும். அதாவது வானமும் பூமியும் படைக்கப்படுவதற்கு அல்லாஹ்வின் பல பண்புகள் காரணமாக இருந்திருக்கின்றது. வானம் விரிவடைதல், கோளங்கள் மேற்கொள்ளும் பயணம் ஆகியவற்றின் பின்னால் அல்லாஹ்வின் பல்வேறு பண்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பற்றி மட்டும்தான் மனிதனால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதைப் பற்றி முழுமையாக அவனால் புரிந்து கொள்ள முடியாது.

எப்போது அல்லாஹ் வழங்கியுள்ள அறிவின் மூலமாக புதிய கண்டுபிடிப்புகள் மனிதன் கண்டுபிடிக்கின்றானோ அப்போது அம்மனிதன் மிகவும் கவலையடைகின்றான். பல விஞ்ஞானிகள் மேலும் பல விஷயங்களை தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் ஒரு சாரார் ணுஷீற ணுஶறெ உருவானதைக்

கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. எவ்வாறிருப்பினும், வானம் பூமி எவ்வாறு படைக்கப்பட்டது? பிரபஞ்சம் எவ்வாறு விரிவடைந்து கொண்டே செல்கின்றது? என்பதைப் பற்றியெல்லாம் அல்லாஹ் கூறிவிட்டான். ஆனால், பிரபஞ்சம் விரிவடைவது தொடர்பான இந்த எண்ணம் 100 வருடங்களுக்கு முன்பு வரை மனிதனின் கற்பனையில் கூட வரவில்லை. இன்றைய கல்வி அறிவு படைத்த மனிதன் கண்டுபிடிக்கின்ற புது விஷயங்கள் தொடர்பாக இறைவனது இந்த இறுதி வேதத்தில் முதலிலேயே கூறப்பட்டிருக்கின்றது. மேலும், அதற்கான தெளிவும் விளக்கமும் கூட அதில் இருக்கிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட நூல்கள் இதனுடன் எவ்வாறு போட்டிபோட முடியும்? இதைப்போன்ற ஒரு வேதநூலை நீங்கள் கொண்டு வரவும் முடியாது. இதிலுள்ளது போன்ற ஒரு வசனத்தைக் கூட உங்களால் உருவாக்க முடியாது என்பது அல்லாஹ்வின் சவாலாகும். எனவே, அந்த மகத்தான தூதர் மீது இறக்கப்பட்டுள்ள இந்த மகத்தான வேதத்தின் காலக்கட்டம் கியாமத் நாள் வரை நீடித்திருக்கின்றது.

அஹ்மதி முஸ்லிம்களைப் பொருத்தவரை அவர்கள் ஏதாவதொரு புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்த பிறகு அது திருக்குர்ஆனில் உள்ள கருத்துக்கு ஒத்ததாக இருக்கின்றது என்று கூறமாட்டார்கள். மாறாக, அஹ்மதி விஞ்ஞானிகள் தனது கண்டுபிடிப்பிற்கான ஆதாரத்தை முதலில் திருக்குர்ஆனிலிருந்தும் கிடைத்த அறிவின் அடிப்படையில் பெற்றுக் கொள்வார்கள். அதன் பிறகுதான் அத்தகைய புது கண்டுபிடிப்புகளை அவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்களும் தனது ஆராய்ச்சிக்கு அடிப்படையாக இருந்த விஷயங்களை திருக்குர்ஆனிலிருந்து கிடைத்த அறிவின் மூலமாகவே பெற்றார்கள். சுருக்கமாக கூறுவதென்றால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட நுட்பமான ஞானங்களின் முத்துக்களை தன்னகத்தே வைத்திருக்கின்றதென்றால் ஆராய்ச்சி செய்கின்ற மனிதன் உலகம் உள்ள நாள் வரையில் அதன் மூலமாக புதிய புதிய விஷயங்களை கண்டுபிடித்துக் கொண்டே இருப்பான்.

பிறகு திருக்குர்ஆனிலுள்ள மார்க்க கட்டளைகளிலுள்ள நுட்பமான ஞானங்கள் தொடர்பாகவும் திருக்குர்ஆன் விளக்கிக் கூறியிருக்கின்றது. உதாரணமாக, தொழ வேண்டும் என்பது ஷரீஅத்தின் கட்டளையாக இருக்கின்ற தென்றால் தொழுகையின் மூலமாக நீங்கள் என்ன பயன்களை பெற்றுக் கொள்வீர்கள்? என்பதைப் பற்றியும் அது கூறியிருக்கிறது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

***வேதத்திலிருந்து உமக்கு வஹீ அறிவித்ததை ஓதுவீராக. மேலும் தொழுகையினை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக தொழுகை வெட்கக் கேட்டிலிருந்தும் பகிரங்கமான தீமையிலிருந்தும் (ஒருவனைத்) தடுக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ்வை நினைவு கூறுவது (எல்லாவற்றையும் விட) பெரியது. மேலும் அல்லாஹ் நீங்கள் செய்வதை அறிகின்றான். (29:46)***

இந்த கட்டளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டும் உள்ள ஒரு கட்டளை அல்ல. மாறாக, இது அவர்களது உம்மத்திற்கு இடப்பட்ட கட்டளையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொழுகை மூலமாக கிடைத்த உயர்வான தகுதி குறித்து இறைவனே அவர்கள் மூலமாக எனது தொழுகையும், எனது தியாகமும் எனது வாழ்வும், மரணமும் இறைவனுக்காகவே இருக்கின்றது என்ற அறிவிப்பை செய்யுமாறு கூறியுள்ளான். எனவே, இந்த கட்டளை அவர்களை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு கூறப்பட்ட கட்டளையாகும். உலகிலுள்ள ஒவ்வொரு குழப்பத்தையும் அகற்றுவதற்காக அல்லாஹ்வுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாக இருக்கின்றது. அல்லாஹ்வுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு இறைவணக்கம் தேவைப்படுகின்றது. இறை வணக்கங்களில் உயர்வான தகுதியை உங்கள் தொழுகைகளை பாதுகாப்பதன் மூலமாகவே நீங்கள் பெற முடியும். தொழுகைகளை நீங்கள் பாதுகாத்து வந்தால் அது எல்லாவிதமான தீமைகளிலிருந்தும் உங்களை தடுத்து விடும். மேலும் இந்த தொழுகைகள் உங்களையும் பாதுகாக்கும். பிறகு மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தை பெறக்கூடியவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகையும் பாவங்களிலிருந்து தப்புவதற்கான ஒரு கருவியாகும். தொழுகைக்குரிய சிறப்பு என்னவென்றால், அது பாவங்களிலிருந்தும் தீய செயல் களிலிருந்தும் மனிதனை தடுக்கின்றது. எனவே, இப்படிப்பட்ட தொழுகைகளை நீங்கள் தேடுங்கள். உங்களது தொழுகைகளை இப்படிப்பட்ட தொழுகைகளாக ஆக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.

தொழுகை அருள்களின் உயிராக இருக்கின்றது. அல்லாஹ்வின் அருட்கொடைகள் இந்த தொழுகைகள் மூலமாகத்தான் வருகின்றன. எனவே, அவற்றை சரியாக நிறைவேற்றுங்கள். அதன் மூலம் நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகி விடுவீர்கள்.

எதுவரை நன்மைகள் உள்ளத்தில் நன்றாக பதிந்து விடுவதில்லையோ அதுவரை தொழுகைகளை நிறைவேற்றுவதில் எங்கோ குறை இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதுவரை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நமது உண்மையான நோக்கமாக இருப்பதில்லையோ அதுவரை நமது தொழுகைகளில் குறை இருக்கின்றது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களது தேவைகளுக்காக அமைதியின்மை ஏற்படும்போது மட்டும் நீங்கள் தொழுகைகளை பேணக்கூடாது. உங்கள் துஆக்களும், தொழுகையும் இப்படிப்பட்ட சர்ந்தர்ப்பத்தில் மட்டும் செய்யப்படுபவையாக இருக்கக் கூடாது. இந்த சிந்தனையுடன் நாம் இறைவணக்கங்களை நிறைவேற்றினால்தான் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நாம் வாரிசாக முடியும். அவ்வாறு இல்லையென்றால் திருக்குர்ஆனின் இந்த கட்டளையில் எவ்வித நுட்பமான ஞானமும் இல்லை என்று நாம் கூறவேண்டியது வரும்.

பிறகு திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஒரு ஞானம் நிறைந்த கட்டளை பொய் கூறக்கூடாது என்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

**வஜ்தனிபுல் ரிஜ்ஸ மினல் அவ்ஸானி வஜ்தனிபுல் கவ்லஸ்ஸுர்** - *சிலை வணக்கத்தின் அருவெறுப்பிலிருந்து உங்களை விலக்கிக் கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (22:31)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிலை வணக்கத்துடன் அல்லாஹ் பொய்யையும் இணைத்துக் கூறியுள்ளான். எவ்வாறு அறிவற்ற மனிதன் அல்லாஹ்வை விட்டுவிட்டு கற்களுக்கு முன்பு தலை குனிகின்றானோ அவ்வாறே அவன் உண்மையையும் நேர்மையையும் கைவிட்டு விட்டு தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொய்யை சிலையாக ஆக்கிக் கொள்கின்றான். இதன் காரணமாகவே அல்லாஹ் பொய்யை சிலை வணக்கத்துடன் இணைத்து விட்டான். எவ்வாறு சிலைவணக்கம் செய்கின்ற ஒருவன் அந்த சிலையிடம் தனது இரட்சிப்பை கேட்கின்றானோ அவ்வாறே பொய் சொல்பவரும் தன் தரப்பிலிருந்து ஒரு சிலையை உருவாக்குகின்றார். மேலும் இந்த சிலை மூலமாக தனக்கு இரட்சிப்பு கிடைத்து விடும் என்று அவன் கருதுகின்றான். எவ்வளவு மோசமான நிலைக்கு அவன் ஆளாகியுள்ளான்? நீங்கள் ஏன் சிலை வணங்கியாக மாறுகின்றீர்கள். இந்த அருவெறுப்பை விட்டுவிடுங்கள் என்று அவர்களிடம் கூறும்போது நாங்கள் ஏன் இதை விட வேண்டும். இது இல்லாமல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்கள் கூறுகின்றார்கள். பொய் கூறுவதை தங்களுக்கு உறுதுணையாக கருதுவதை விட மிகப்பெரிய துர்பாக்கிய நிலை வேறு என்ன இருக்க முடியும்? ஆனால், நான் உங்களிடம் உறுதியாகக் கூறுகின்றேன். இறுதியில் உண்மையே வெற்றி பெறும். உண்மை பேசுபவர்களுக்கே வெற்றி கிடைக்கும். பொய்யைப் போன்ற இழிவான செயல் வேறு எதுவுமே இல்லை என்பதை உறுதியாக நினைவில் வையுங்கள். பொதுவாக உண்மை கூறுபவர்கள் பிடிக்கப்படுகின்றார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் நான் இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். எனக்கெதிராக ஏழு வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றது. இறைவனது அருளால் எந்த ஒரு வழக்கிலும் ஒரு பொய்யான சொல்லை எழுத வேண்டிய தேவை எனக்கு ஏற்படவில்லை. ஏதாவது ஒரு வழக்கிலாவது எனக்கு தோல்வி ஏற்பட்டதாக எவராவது கூற முடியுமா? அல்லாஹ் தானாகவே உண்மை பேசுபவர்களின் உதவியாளனாக இருக்கின்றான். நேர்மையை கடைபிடிப்பவர்களுக்கு அல்லாஹ் தண்டனை வழங்குவானா? அவ்வாறிருக்குமென்றால் உலகில் எவருக்குமே உண்மை பேசுவதற்கான தைரியம் வராது. இறைவன் மீதுள்ள நம்பிக்கையும் இல்லாமல் ஆகி விடும். நேர்மையை கடைபிடிப்பவர்கள் உயிருடன் இருக்கும் நிலையிலேயே மரணித்து விடுவார்கள். உண்மை என்னவென்றால் உண்மை பேசியதால் எவருக்கு தண்டனை கிடைக்கின்றதோ அது உண்மை பேசியதால் அவருக்கு கிடைக்கவில்லை. அந்த தண்டனை அவரிடம் மறைந்து காணப்படும் ஏனைய தீய செயல்களின் காரணமாகத்தான் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவர் கூறிய வேறு பொய்களுக்குரிய தண்டனையாக அது அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இறைவனிடம் இப்படிப்பட்டவர்களின் தீய செயல்கள் தொடர்பான ஒரு பட்டியல் இருக்கின்றது. பல தவறுகளை அவர்கள் செய்திருப்பார்கள். ஏதாவது ஒரு தவறின் காரணமாக அவருக்கு

தண்டனை கிடைக்கின்றது.

எனவே, இப்படிப்பட்ட விஷயங்களிலிருந்து தப்பிப்பதற்கு **இஸ்திக்ஃபார்** (பாவமன்னிப்புக் கோருதல்) மிகவும் அவசியமானதாகும்.

**ஹிக்மத்** என்பதன் இன்னொரு பொருள் அறிவுப்பூர்வமான விஷயங்கள் ஆகும். திருக்குர்ஆன், தான் கூறுகின்ற ஒவ்வொரு விஷயத்தையும் ஆதாரத்துடன் நிரூபிக்கின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமான போதனைகளை அது தந்திருக்கின்றது. உதாரணமாக, திருக்குர்ஆன் குற்றவாளி களுக்கு தண்டனை வழங்குமாறு கூறியிருக்கின்றது. ஆனால் சிறு சிறு விஷயங்களுக்காக கோபப்பட்டு அந்த கோபத்தின் தாக்கத்தால் நாம் எவரையும் தண்டித்து விடக்கூடாது. ஒருவரை மன்னிப்பதன் மூலமாக ஒருவர் சீர்திருந்துவார் என்றால் அவரை மன்னிப்பதுதான் ஹிக்மத் ஆக இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் ஒரு மூஃமின் தன் கண்முன் நிறுத்தி செயல்படுவதாக இருந்தால் அப்படிப்பட்டவரது அறிவிலும் புரிகின்ற திறனிலும் வளர்ச்சி ஏற்படும். மேலும் சமுதாயத்தில் இப்படிப்பட்ட போதனைகள் பரவுவதன் மூலமாக அன்பும் நேசமும் வளர்ச்சியடையும். இப்போதனைகளால் மூளையும் ஒளிமயமானதாக ஆகி விடும். எனவே, திருக்குர்ஆனிலிருந்தும் **ஹிக்மத்** ஆன முத்துக்களை தேடி எடுப்பதற்குஒருமூஃமின் எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும். அல்லாஹ்வும் இவ்வாறே கட்டளையிட்டுள்ளான்.

**இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

***வஸ்குர்னா மா யுத்லா ஃபீ புயூதிகுன்ன மின் ஆயாத்தில்லாஹி வல் ஹிக்மா இன்னல்லாஹா லதீபன் ஹபீரா - உங்கள் வீடுகளில் ஓதப்படுகின்ற வசனங்களையும் அதன் ஞானங்களையும் எப்போதும் நினைவில் வையுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக நுட்பமாக பார்க்கின்றவனாகவும் எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான்.***

இந்த வசனத்தில் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும்படி இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். இப்படிப்பட்ட ஞானம் நிறைந்த விஷயங்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. நமது வீடுகளில் திருக்குர்ஆனை மிகவும் கண்ணியமாக வைத்து, அதை ஓதி வருவதிலும் நமக்கு நற்கூலி இருக்கத்தான் செய்கிறது. ஆனால், திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கேற்ப செயல்படும் போதுதான் இந்த வசனங்கள் மூலம் நாம் முழுமையாக பயன் பெறுவதுடன் திருக்குர்ஆனின் நோக்கத்தையும் நிறைவேற்றியவர்களாக ஆவோம். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியின்படியும் நாம் செயல்பட வேண்டும். மேலும் இந்த வசனங்களையும் அதிலுள்ள நுட்பமான ஞானங்களின் முத்துக்களையும் நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இந்த வசனத்தின் இறுதியில் அல்லாஹ் நுட்பமான பார்வையை உடையவனாகவும் எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான் என்று வந்திருக்கின்றது. நமது அந்தரங்கங்களையும் வெளித்தோற்றத்தையும் அறிந்து வைத்திருக்கின்ற இறைவனை நாம் ஏமாற்ற முடியாது. அவன் ஒவ்வொரு சிறு சிறு நன்மைகளையும் அறிந்தவனாக இருக்கின்றான். அவ்வாறே ஒவ்வொரு தீமையையும் அறிந்தவனாக இருக்கின்றான் என்பதையே இந்த வசனங்கள் சுட்டிக் காட்டுகின்றன. எனவே இந்த மகத்தான தூதர் மீது இறங்கியுள்ள மகத்தான வேதத்தின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக! ஆமீன்.

***KUTHBA***

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

*KALIFATHUL MASIH V*

***ON 18.01.08 AT LONDON***

***TRANSLATED BY : M .RAFEEQ AHMAD***

***PUBLISHED BY :*** **MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD** ***TELEFAX : 0462 – 2352456***